**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 183/2023**

**நாள்: 11.12.2024**

**அரசு தரப்பு சாட்சி** : 14 (LW20)

2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய திரு. மலைச்சாமி என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மலைச்சாமி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( எதிரி ஆஜர். )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.04.2023ம் தேதி உச்சிப்புளி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த பொழுது அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் ராணி என்பவர் அப்போது பணியில் இருந்த சார்பு ஆய்வாளர் அசோக் சக்கரவர்த்தி என்பவரிடம் புகார் மனு ஒன்றை கொடுத்தார். அந்த புகாரின் தன்மைக்கேற்ப குற்ற எண்.113/2023, பிரிவுகள் 174 குவிமுச ஆக பதிவு செய்து, எனது விசாரணைக்கு வைத்தார். அதை எனது

விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் முனியசாமி மற்றும் மகேஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைடம் அ.த.சா.ஆ.11 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

அன்றைய தினமே இறந்துபோன காளிமுத்து வைக்கப்பட்டிருந்த அரசு மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று பிரேதத்தை பார்வையிட்டு, 12.15 மணி முதல் 13.20 மணி வரை பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.12 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோன காளிமுத்துவின் இறப்பு சம்மந்தமாக பிரேதத்தின் மீது பிணக்கூறாய்வு செய்து சான்று வழங்க வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் அடிப்படையில் பிணக்கூறாய்வு முடித்து உடலை மணிகண்டன் என்ற காவலர் மூலமாக அவர் குடும்பத்தாரிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன். பின்பு சாட்சிகள் ராணி, வினிதா, பால்பழனி, சண்முகவேலு, சுமதி, வீரையா, ஆண்டி, செல்வராஜ், பார்வை மகஜர் சாட்சிகளான மகேஷ் மற்றும் முனியசாமி ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

சாட்சிகளின் விசாரணையிலிருந்தும், எனது இரகசிய விசாரணையில் இருந்தும் காயம்பட்டு இறந்துபோன காளிமுத்து என்பவர் இயற்கையான முறையினால் மரணம் ஏற்படவில்லை என்றும், அவர் சுப்ரமணியன் என்ற அஜித் என்பவர் தாக்கியதால் மரணம் ஏற்பட்டது என்பதை அறிந்து வழக்கின் சட்டப்பிரிவுகளை 174 குவிமுச பிரிவில் இருந்து 302 இதச வாக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை அன்றைய தினமே நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். அந்த சட்ட மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ. 13 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் எதிரியான சுப்ரமணியன் என்ற அஜித்தை தேடிவந்த நிலையில், 20.04.2023ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு தாமரைக்குளம் இருட்டுரணி பஸ் ஸ்டாப் அருகே எதிரி இருப்பதாக தகவல் கிடைத்து, கிராம

நிர்வாக அலுவலர் உதய சூர்யா மற்றும் அவரது உதவியாளர் பரிமளா ஆகியோருடன் அங்கு சென்று, மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் எதிரியிடம் காரணம் கூறி கைது செய்து கேட்கும் பொழுது, எதிரியானவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று கொடுத்தார். அதில், அந்த குற்றத்தை ஒப்புக்கொண்டு, சம்பவத்திற்கு பயன்படுத்திய 2 1/2 நீளமுள்ள, 70 இன்ஞ் சுற்றளவுள்ள கம்பு, மற்றும் சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 65 AF 7573 இருசக்கர வாகனத்தையும், இறந்துபோன காளிமுத்து வீட்டில் வைத்திருப்பதாக கூறி காளிமுத்து வீட்டிற்கு சென்று, அங்கு மறைத்து வைத்திருந்த அந்த இரண்டு பொருட்களையும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பொருட்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்சொன்ன சாட்சிகளிடம் நான் சாட்சி கையொப்பம் பெற்றேன்.

பின்பு இவ்வழக்கில் சாட்சியான பால்பழனி என்பவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுப்பதாக கூறியதனால், நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து, அவரது வாக்குமூலம் இராமநாதபுரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 அவர்களால் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முதல் விசாரணை ஆவணங்களை சரிபார்ப்பதற்காகவும், குறியீடு செய்வதற்காகவும் அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/ஏ.கே.மெக்பூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .